17.06.2025 CC 278/2019 PW3. ஜார்ஜ் அருள் செல்வன்

கடந்த 16.08.2022ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற Crl.M.P.2838/2022 dated 16.06.2023ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. நானும் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் கோணம் ITI கல்லூரியில் ஒரே காலக்கட்டத்தில் படித்தோம் என்றாலும், அதன் பேரில் நெருக்கமான நபர் என்றால், சரிதான். நான் ITI முடித்து விட்டு என்ன வேலை செய்து வந்தேன் என்றால், வெளிநாடு சென்று வேலை செய்து வந்தேன். எனது குடும்பம் ஒரு நடுத்தர குடும்பம் என்றால், சரிதான். அ.சா.1 எனது தங்கை என்றால், சரிதான்.

2. 1997ம் வருடம் வீட்டு வேலை முடிந்து விட்டதா என்று கேட்டு குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நான் கடிதம் அனுப்பினேனா என்றால், சரிதான். என் தங்கையின் நிச்சயத்தின் போதும் திருமணத்தின் போதும் நான் வெளிநாட்டில் தான் இருந்தேன் என்றால், சரிதான். எனக்கு எந்த பிரச்சனைகளும் நேரடியாக தெரியாது என்றால், சரிதான். அ.சா.1 எனது தங்கை என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.

17.06.2025 CC 278/2019 PW2. விமலா

கடந்த 16.08.2022ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற Crl.M.P.2838/2022 dated 16.06.2023ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. நான் போலிஸ் விசாரணையில் கூறியதை தான் நீதிமன்றத்திலும் சாட்சியமாக அளித்துள்ளேன் என்றால், சரிதான். எனது குடும்பம் ஒரு நடுத்தர குடும்பம் என்றால், சரிதான். நாங்கள் நடுத்தர குடும்பத்தை சேர்ந்த நபர்கள் என்பதால் திருமணத்தின் போது முதல் விசாரைணியில் கூறியது போல் நகைகள், பணம் கொடுத்ததாக சொல்லப்படுவது பொய் என்றால், சரியல்ல.

2. எனது வீட்டிற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், பேருந்தில் செல்ல 1 மணி நேரம் ஆகும். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்தாக சொல்லப்படும் 1லட்சமும் 50 பவுண் நகையும் கொடுத்த விவரம் நேரடியாக தெரியாது என்றால், சரியல்ல. அதனை கொடுக்கும் போது நான் உடன் இல்லை என்றால், சரிதான். ஆனால் அவர்கள் கொடுக்கப் போகும் விவரம் எனக்குத் தெரியும். எனக்கு எந்த விவரங்களும் நேரடியாக தெரியாது என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

3. 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டில் எனது உறவினர்கள் திருமணத்தை குறித்து என்ன பேசினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். 5 பவுண் தங்க செயின் மற்றும் 2 காப்புகளை அடகு வைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். எனது தங்கை கூறி தான் தெரியும். மேற்படி விவரங்களை நான் பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

4. நாங்கள் அ.சா.1ன் வீட்டிற்கு தேவையான வீட்டு உபயோக பொருட்களை வாங்கிக் கொடுத்தோம் என்று கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் எனது தங்கையின் கணவருக்கு எனது பெற்றோர்கள் குழுவில் இருந்து பணம் எடுத்துக் கொடுத்தார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால் அது குறித்த சங்கதிகளை கூறியுள்ளோம். மேற்படி சங்கதிகளை நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

5. எனது தங்கை வாடகை வீட்டில் வசித்து வந்ததற்கான ஆவணங்கள் மற்றும் எனது அண்ணன் அந்த வாடகை பணத்தை கொடுத்தற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மேற்படி விவரங்கள் வழக்கை மிகைப்படுத்திக் கூறுவதற்கான பொய் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர் 5 சென்ட் இடத்தை காவல்நிலையத்தில் வைத்து அவரது குழந்தையின் பெயரில் எழுதிக் கொடுப்பதாக கூறினார் என்பதை நிரூபணம் செய்வதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மேற்படி சங்கதிகளை நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

6. எனது தங்கையின் நகைகளை மீட்டெடுப்பதற்காக குற்றம் சுமத்தப்பட்ட நபர் 4லட்சம் ரூபாய் தருவதாக கூறினார் என்பது வழக்கிற்கான பொய் என்றால், சரியல்ல. எனது தங்கை தற்சமயம் திருமணம் முடித்து புதுக்கோட்டையில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு தற்சமயம் வரை திருமணம் ஆகவில்லை என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி சங்கதிகளை நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

7. எனது தங்கைக்கும் கீலர் பாஸ்கர் என்ற பாஸ்கருக்கும் தகாத உறவு இருந்து வந்ததாக குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் கூறி அதனை கண்டிக்க சொன்னார் என்றால், இல்லை. எனது தங்கைக்கு கீலர் பாஸ்கர் என்ற பாஸ்கருக்கும் பதிவு திருமணம் நடைபெற்றதா என்றால், இல்லை.

8. அ.சா.1 எனது தங்கை என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.